
**நவம்பர் – 06**

# TNPSC துளிகள்

- ஆஸ்திரேலிய நாட்டின் சிட்னி நகரில் நடைபெற்று வரும் 67வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் தமிழக சட்டசபை சபாநாயகர் M.அப்பாவு பங்கேற்கிறார்.
- வரலாற்றாசிரியர் இராமச்சந்திர குஹா, 'Speaking with Nature' என்ற தனது சமீபத்தியப் புத்தகத்தினை சென்னையில் வெளியிட்டார்.
- 2033 ஆம் ஆண்டளவில் இந்தியா ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1 டிரில்லியன் இணைய வெளித் தாக்குதல்களை எதிர்கொள்ளும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு இந்த எண்ணிக்கை 2047 ஆம் ஆண்டில் 17 டிரில்லியனாக உயரும்.
- இந்தியாவின் மிகப்பெரிய ஜன் ஔஷதி கேந்திரா ஆனது, புது டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்விக் கழகத்தில் (AIIMS) திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கோடீஸ்வர வரி செலுத்துவோர் எண்ணிக்கையானது 2014 ஆம் மதிப்பீட்டு ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2024 ஆம் வருமான வரி மதிப்பீட்டு ஆண்டில் (AY) ஐந்து மடங்கு அதிகரித்து 2.2 லட்சமாக அதிகரித்துள்ளது.
- ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் சமீபத்திய புதியத் தகவலின் படி, கிராமப் புற இந்தியாவின் 95% நிலப் பதிவுகள் முழுமையாக எண்ணிம மயமாக்கப்பட்டுள்ளன.
- முதலாவது பருவநிலை மற்றும் சுகாதார ஆப்பிரிக்கா மாநாடு (CHAC 2024) ஆனது ஜிம்பாப்வேயின் ஹராரே நகரில் நடைபெற்று வருகிறது.
- மேற்கு வங்காளத்தில் உள்ள இந்திய-வங்காளதேச எல்லையில் பெட்ராபோல் என்னும் இடத்தில் உள்ள நிலம் சார் துறைமுகத்தில் புதிதாக கட்டமைக்கப்பட்டுள்ள பயணியர் முனைய கட்டிடம் மற்றும் 'மைத்ரி துவார்' என்ற சரக்குப் போக்குவரத்து வாயில் ஆகியவை திறக்கப்பட்டுள்ளன.
- மேம்படுத்தப் பட்ட உயிரித் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் உணவுத் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக பஞ்சாபில் உள்ள மொஹாலி எனுமிடத்தில் BRIC – தேசிய வேளாண் உணவு உற்பத்திக் கல்வி நிறுவனத்தினை (BRIC-NABI) அரசாங்கம் திறந்து வைத்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## அமூரில் பெருங்கற்கால புதைவிடம்





- சென்னை வட்ட இந்தியத் தொல்லியல் துறை (ASI) ஆனது, அமூரில் அகழாய்வுப்

பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

- இது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூர் அருகே கீழைப் பாலாற்றின் படுகையின் கரையில் அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்டத் தளமாகும்.
- ASI ஆனது, 1921 ஆம் ஆண்டில், கீழைப் பாலாறு படுக்கையில் உள்ள அமூர் கிராமத்தில் அமைந்துள்ள 130 ஏக்கர் நிலத்தில் கல் பதுக்கைகள் மற்றும் கற்குவியல்களைக் கொண்ட ஒரு பெருங்கற்காலப் புதைவிடத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் பண்டைய கால புதைவிடம் ஆனது, 2000 ஆண்டுகள் பழமையானது என கருதப் படுகிறது.
- 2500 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படும் சிறுதாவூரில் 2007 ஆம் ஆண்டில் பெருங்கற்கால கல் சவப்பெட்டி, இரும்புப் பொருள்கள் மற்றும் செந்நிற சூதுபவள மணிகள் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

# தேசியச் சேதிகள்

## MIDH திட்டத்தின் விரிவாக்கம்




- மத்திய அரசானது ஒருங்கிணைந்தத் தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (MIDH) மண்ணில்லா வேளாண்மை, மீன்வளர்ப்புடன் கூடிய வேளாண்மை, பல் அடுக்கு செங்குத்து வேளாண்மை மற்றும் துல்லிய வேளாண்மை ஆகிய நான்கு புதிய வகை கூறுகளை சேர்க்க முடிவு செய்துள்ளது.
- MIDH ஆனது மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டம் ஆகும்.
- இது பழங்கள், காய்கறிகள், வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள், காளான்கள், மசாலாப் பொருட்கள், பூக்கள், நறுமணத் தாவரங்கள், தேங்காய், முந்திரி, கொக்கோ மற்றும்

மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்கிறது.

- 2010-11 ஆம் ஆண்டில் சுமார் 240.53 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் மொத்தத் தோட்டக் கலை உற்பத்தியானது 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 334.60 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- உலகில் பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- MIDH திட்டத்தின் வருடாந்திர நிதி ஒதுக்கீடு ஆனது நடப்பு நிதியாண்டில் (2024-25) 2,000 கோடி ரூபாய் ஆகும்.

## Act4Dyslexia பிரச்சாரம்

- டிஸ்லெக்ஸியா (வாசிப்புத் திறன் குறைபாடு) குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ராஷ்டிரபதி பவனின் தெற்குக் கட்டிடம் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவை சிவப்பு நிறத்தில் ஒளிரச் செய்யப்பட்டன.
- இந்தக் கற்றல் குறைபாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நாடு தழுவிய 'Act4Dyslexia பிரச்சாரம்' ஆனது மேற்கொள்ளப்பட்டது.
- சுமார் 35 மில்லியன் மாணவர்கள் உட்பட இந்தியாவின் மக்கள் தொகையில் 20 சதவீதம் பேரினை டிஸ்லெக்ஸியா நிலை பாதித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.





## ஆரம்ப் 6.0 முன்னெடுப்பு

- ஆரம்ப் 6.0 எனப்படுகின்ற பணி நோக்குநிலை நிகழ்வின் போது இளம் அரசு ஊழியர்களுடன் பிரதமர் உரையாடினார்.
- இது பொதுப் பங்கேற்பு (ஜன் பகிதாரி) மூலம் நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் கருத்துரைப்பு மற்றும் குறை தீர்க்கும் செயல்முறைகளை மேம்படுத்துவதில் கவனம்

செலுத்துகிறது.

- இளம் அரசு ஊழியர்களுக்கான ஒரு பணி நோக்குநிலை திட்டமான ஆரம்ப் என்பது அவர்களை ஆளுமைத் திறன்களுடன் சித்தப் படுத்துவதற்கும் மிகவும் புதுமையான சிந்தனையை வளர்ப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## விலங்குகளுக்கான நிலையான கால்நடை சிகிச்சை வழிகாட்டுதல்கள்




- கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை (DAHD) ஆனது, கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பிற்கான "நிலையான கால்நடை சிகிச்சை வழிகாட்டுதல்களை (SVTGs)" வெளியிட்டுள்ளது.
- உணவு மற்றும் வேளாண் அமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள SVTG ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மேம்பாட்டு முகமையினால் (USAID) ஆதரிக்கப் படுகின்றன.
- இது பல்வேறு விலங்கு நோய்களுக்குத் தரப்படுத்தப்பட்ட, முறையான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு இதனால் இந்தியா முழுவதும் மேம்படுத்தப் பட்ட விலங்கு நலம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றை உறுதி

செய்கிறது.

- நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், மருந்து செலுத்தப்பட்ட காலம் மற்றும் உணவிற்காக அந்த விலங்கு கொல்லப்படும் கால இடைவெளி, சாத்தியமான பக்க விளைவுகள் மற்றும் முதல் தர சிகிச்சைக்கான முடிவு அளவுருக்கள் உட்பட பல மருந்துகளுக்கான மருந்தளவு, வழி, சிகிச்சையின் காலம் ஆகியவற்றைக் கொண்ட பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைகள் இதில் அடங்கும்.

## நமோ ட்ரோன் திதி திட்ட வழிகாட்டுதல்கள்





- நமோ ட்ரோன் திதி எனப் படுகின்ற ஒரு மத்திய அரசுத் திட்டத்தின் செயல்பாட்டு வழி காட்டுதல்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.
- 2024-25 முதல் 2025-2026 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட 14 ஆயிரத்து 500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆளில்லாத விமானங்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- ஆளில்லா விமானங்களை வாங்குவதற்காக, அதிகபட்சம் எட்டு லட்சம் வரையிலான மதிப்பு கொண்ட ஆளில்லா விமானம் மற்றும் அதன் துணைக்கருவிகளின் விலையில் 80 சதவீதம் ஆனது பெண்கள் சுயஉதவி குழுக்களுக்கு வழங்கப்படும்.
- மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் ஒருவர் ஏறத்தாழ 15 நாட்கள் வரையிலான பயிற்சிக்குத் தேர்வு செய்யப் படுவார்.
- இது கட்டாய ஆளில்லா விமான இயக்கப் பயிற்சி மற்றும் வேளாண் நோக்கத்திற்கான ஊட்டச்சத்துக்கள் மற்றும் பூச்சிக் கொல்லிப் பயன்பாட்டிற்கான கூடுதல் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


## நுண் நொதிகள் - CSIR கழக ஆய்வு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் மத்திய தொல் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-CLRI) மேற்கொண்ட ஓர் ஆய்வில், நுண் நொதிகள் ஆனது கொலாஜன் எனப்படுகின்ற ஒரு கட்டமைப்புப் புரதத்தின் முக்கிய ஒருங்கிணைப்பினை நன்கு உறுதி செய்து, நொதிச் சிதைவுக்கான எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

- நுண் நொதிகள் ஆனது, நொதிகளைப் போலவே செயல்படும் நுண் பொருட்கள் ஆகும்.
- மாங்கனீசு அடிப்படையிலான ஆக்சிடேஸ் நானோசைம் (MnN) ஆனது உயிரிய மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க செயல் திறன்களைக் கொண்டுள்ளது.




## புதியப் பாதுகாப்பு எச்சரிக்கை அமைப்பு




- நுண் மற்றும் மென்மையான பொருள் அறிவியல் மையத்தின் (CeNS) அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அழுத்த மின் விளைவு கொண்ட பலபடிச் சேர்ம நுண் கூட்டுப் பொருட்களின் அடிப்படையிலான ஒரு பாதுகாப்பு எச்சரிக்கை அமைப்பை உருவாக்கி உள்ளனர்.
- இந்த நுண் கூட்டுப் பொருட்கள் ஆனது அழுத்தம் உணர்தல் மற்றும் ஆற்றல் மாற்றப் பயன்பாடுகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

- பலபடி சேர்மக் கலவைகளில் நிரப்பிகளாகப் பயன்படுத்தப்படும் போது மிகப்பெரும் பொருத்தமானப் படிக அமைப்பு மற்றும் மேற்பரப்பு பண்புகளைக் கொண்ட உலோக ஆக்சைடு நுண் பொருட்கள் அழுத்த மின் விளைவு எதிர் செயல்பாடுகளை கணிசமாக மேம்படுத்துகின்றன.
- இதற்காக ஆராய்ச்சியாளர்கள் சிர்கோனியா அடிப்படையிலான இரண்டு உலோக-கரிமக் கட்டமைப்புகளை (UiO-66 மற்றும் UiO-67) ஒருங்கிணைத்தனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பவளப்பாறை முக்கோணப் பகுதி




- புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டின் அதிகமான விரிவாக்கத்தினால் பவளப்பாறை முக்கோணப் பகுதி மீது ஏற்படும் கடுமையான ஆபத்துகளானது, உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கையின் (CBD) 16வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP16) வெளியிடப் பட்ட அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- பெரும்பாலும் 'கடல்களின் அமேசான்' என்று குறிப்பிடப்படுகின்ற, பவளப் பாறை முக்கோணப் பகுதி ஆனது, சுமார் 10 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்துக் காணப்படும் கடல் பகுதி ஆகும்.
- இதில் இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தைமோர்-லெஸ்டே, சாலமன் தீவுகள் போன்ற நாடுகள் அடங்கும்.
- இந்தப் பிராந்தியத்தில் உலகின் சுமார் 76 சதவீத பவளப்பாறை இனங்களையும், தங்கள் வாழ்வாதாரத்திற்காக இதன் வளங்களைச் சார்ந்துள்ள 120 மில்லியனுக்கும் அதிகமான மக்களையும் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய காசநோய் அறிக்கை 2024

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது அதன் 2024 ஆம் ஆண்டு உலகளாவிய காச நோய் (TB) அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டில் காசநோயால் பாதிக்கப்பட்ட 10.84 மில்லியன் மக்களில், சுமார் 8.16 மில்லியன் பேர் மட்டுமே கண்டறியப் பட்டு பதிவு செய்யப்பட்டனர் என்பதோடு இது 2.7 மில்லியன் பாதிப்பு இடைவெளிக்கு வழிவகுத்தது.
- 1995 ஆம் ஆண்டில் WHO அமைப்பானது உலகளாவியக் காசநோய் கண்காணிப்பைத் தொடங்கியதிலிருந்து பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கை இதுவாகும்.
- இவ்வாறு, 2023 ஆம் ஆண்டில் காசநோய் பாதிப்பானது கோவிட்-19 பெருந்தொற்றினை விஞ்சி மீண்டும் முதன்மையான தொற்று மிக்க உயிர்க் கொல்லியாக மாறியது.
- காசநோய் தடுப்புத் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதிக் கட்டமைப்பில் மிகப் பெரிய நிதி இடைவெளி உள்ளது என்பதோடு 2023 ஆம் ஆண்டில் 22 பில்லியன் டாலர் ஆகிய நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்கில் 5.7 பில்லியன் டாலர் மட்டுமே கிடைக்கப்பெற்றது.
- உலகளவில், 2020 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் காசநோய்ப் பாதிப்பு 4.6% அதிகரித்துள்ளது.
- கடந்த 20 ஆண்டுகளாக ஆண்டிற்கு சுமார் 2% என்ற வீதத்தில் பதிவாகி வந்த சரிவு இதனால் தலைகீழாகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 28 லட்சம் காசநோய் பாதிப்புகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது என்ற நிலையில் இது உலகளாவியப் பாதிப்புகளில் 26% ஆகும்.
- 3.15 லட்சம் காசநோய் தொடர்பான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ள நிலையில் இது உலகளாவிய உயிரிழப்புகளில் 29% ஆகும்.

### Estimates of TB burden

*Estimates of TB burden are produced by WHO in consultation with countries. Ranges represent uncertainty intervals.*


| | Number | Rate per 100 000 population |
|---|---|---|
| Total TB incidence, 2023 | 10 800 000 (10 100 000–11 700 000) | 134 (125–145) |
| TB incidence in people living with HIV, 2023 | 662 000 (589 000–739 000) | 8.2 (7.3–9.2) |
| Multidrug-resistant or rifampicin-resistant TB (MDR/RR-TB) incidence, 2023 | 400 000 (360 000–440 000) | 5 (4.5–5.5) |
| TB deaths in HIV-negative people, 2023 | 1 090 000 (977 000–1 200 000) | 13 (12–15) |
| TB deaths in people with HIV, 2023 | 161 000 (132 000–193 000) | 2 (1.6–2.4) |

# மாநிலச் செய்திகள்


## மரபணுப் பன்முகத்தன்மைக்காக புலிகளின் இடமாற்றத் திட்டம்

- மகாராஷ்டிராவில் உள்ள தடோபா-அந்தாரி புலிகள் வளங்காப்பகத்தில் இருந்து ஒரு பெண் புலியானது ஒடிசாவில் உள்ள சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்திற்கு (STR) இடம் மாற்றப்பட்டுள்ளது.
- புலிகளின் மீதான இடமாற்றத் திட்டம் ஆனது புலிகள் வளங்காப்பகத்திற்குள் மரபணு வளத்தினை மேம்படுத்துவதற்கான ஒடிசா அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதி ஆகும்.

- சிமிலிபால் ஆனது இந்தியாவில் கருநிறமிகள் அதிகம் கொண்ட வங்காளப் புலிகள் காணப் படும் ஒரே காட்டு வாழ்விடமாகும்.
- இந்த ஆண்டு நடத்தப்பட்ட ஒடிசா புலிகள் மதிப்பீட்டில், சிமிலிபாலில் உள்ள மொத்த 24 இளம் பருவப் புலிகளில் 13 அரிய வடிவங்களைக் கொண்ட கருநிறமிகள் மிக அதிகம் கொண்ட புலிகள் என்று கண்டறியப்பட்டது.



## மிசோ-மாமிச உண்ணிகள் வளங்காப்புத் திட்டம்





- புனே வனத்துறையின் வனவிலங்குப் பிரிவு ஆனது, சமீபத்தில் ஓநாய், குள்ள நரி, நரி, புனுகுப் பூனை மற்றும் கழுதைப் புலி ஆகிய ஐந்து வகை வன விலங்கு வகைகளை உள்ளடக்கிய முதன்மை வளங்காப்புத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது.
- இந்த இனங்கள் ஆனது வனத்துறையினால் கூட்டாக 'மிசோ-கார்னிவோரஸ்' (மிசோ மாமிச உண்ணிகள்) என்று அழைக்கப்படுகின்றன.

- இந்த இனங்கள் ஆனது முக்கியமாக நாய் மற்றும் பூனை குடும்பத்தைச் சேர்ந்தவை ஆகும்.

# முக்கிய தினங்கள்

## உலக சுனாமி விழிப்புணர்வு தினம் - நவம்பர் 05

- 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்த நாளை நியமித்தது.
- இது சுனாமி விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் சுனாமி அபாயத்தைப் பெருமளவில் குறைப்பதற்கான புதுமையான அணுகுமுறைகளைப் பகிர்ந்து கொள்வதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடந்த 100 ஆண்டுகளில், 58 சுனாமிகள் சுமார் 260,000க்கும் அதிகமான உயிர்களை பலி வாங்கியுள்ளன.
- நவம்பர் 05 ஆம் தேதியானது, "இனமுரா-நோ-ஹி" (The Burning of the Rice Sheave) என்ற நிகழ்வை நினைவு கூரும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1854 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், ஜப்பானிய கிராமவாசி ஒருவர் தனது அண்டை வீட்டாருக்கு எச்சரிக்கையளிப்பதற்காக வேண்டி மலை உச்சியில் இருந்த தனது நெல் வைக்கோல் போர்களுக்கு தீ வைத்து, நெருங்கி வந்த சுனாமியில் இருந்து அவர்களின் உயிரைக் காப்பாற்றினார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★